இன்றைய செய்தி நாளைய வரலாறு




# முரசொலி

Murasoli

www.murasoli.in நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 05 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஆடி 30 – வெள்ளிக்கிழமை 15 ஆகஸ்ட் 2025 – சென்னை 28 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 05 : Thiruvalluvar Year - 2056 - Aadi 30 - Friday 15 August 2025 - Chennai 28 Pages ₹ 5.00


**சுதந்திர தினம்: கோட்டை கொத்தளத்தில்**

# முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று தேசியக் கொடி ஏற்றுகிறார்!

## விருதுகளை வழங்கி சிறப்பிக்கிறார்!



**சென்னை, ஆக. 15–**

**நாட்டின் 79வது சுதந்திர தினத்தை முன்னிட்டு சென்னை, புனித ஜார்ஜ் கோட்டை கொத்தளத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (15.8.2025) காலை 9 மணிக்கு தேசியக்கொடி ஏற்றுகிறார். இதைத்தொடர்ந்து அப்துல் கலாம் விருது மற்றும் கல்பனா சாவ்லா விருது உள்ளிட்ட விருதுகளையும் முதல்வர் வழங்குகிறார்.**

நாட்டின் 79வது சுதந் திர தினம் இன்று (15.8.2025) கோலாகலமாக கொண்டாடப்படு கிறது. சுதந்திர தினத்தன்று டெல்லி கோட்டையில் பிரதமர் மோடி கொடி யேற்றி உரையாற்றுவார். அந்தந்த மாநில முதல் வர்கள் தலைநகரில் தேசியக்கொடியை ஏற்றி வைப்பார்கள். அதன் படி, தமிழ்நாட்டின் தலை நகர் சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையில் இன்று (15.8.2025) காலை 9 மணிக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தேசியக்கொடியை ஏற்றிவைத்து உரை யாற்றுகிறார். இதற்கான அனைத்து ஏற்பாடுகளும் சென்னை கோட்டையில் சிறப்பாக செய்யப்பட்டுள்ளன.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தேசியக்கொடி ஏற்றி வைத்ததும், விழா மேடையில் தமிழ்நாட்டிற்கும், தமிழின வளர்ச்சிக்கும் பங்காற்றியவர்களை பெருமைப் படுத்த 'தகைசால் தமிழர்' என்ற பெயரிலான விருது மற்றும் விருதுடன் ரூ.10 லட்சத்துக் கான காசோலை மற்றும் பாராட்டு சான்றிதழ் வழங்குகிறார்.

அதேபோன்று, அறிவியல் தொழில் நுட்பத்தில் சிறந்து விளங்குபவர்களுக்கு டாக்டர் அப்துல் கலாம் விருது, துணிவு மற்றும் சாகச செயலுக்கான கல்பனா சாவ்லா விருது, முதலமைச்சரின் நல் ஆளுமை விருது, மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக மிகச்சிறந்த சேவை புரிந்தோருக்கான தமிழ்நாடு அரசு விருதுகள், மகளிர் நலனுக்காக சிறப்பாக தொண்டாற்றிய தொண்டு நிறுவனம் மற்றும் சமூக பணியாளருக்கான விருதுகள், சிறந்த உள்ளாட்சி அமைப்புகளுக்கான முதலமைச்சர் விருதுகள், முதலமைச்சரின் மாநில இளைஞர் விருதுகள் உள்ளிட்ட விருதுகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விழா மேடையி லேயே வழங்கி கவுரவிக்கிறார்.

முன்னதாக, காலை 8.45 மணிக்கு சுதந்திர தின விழா நிகழ்ச்சிக்கு கோட்டை கொத்த ளத்திற்கு வரும் முதல்வர் மு.க.ஸ்டாலினை தலைமை செயலாளர் வரவேற்கிறார். முதல்வருக்கு முப்படை அதிகாரிகள் டிஜிபி, சட்டம்–ஒழுங்கு கூடுதல் டிஜிபி, சென்னை போலீஸ் கமிஷனர் ஆகி யோரை தலைமை செயலாளர் முருகானந்தம் அறிமுகம் செய்து வைக்கிறார். இதையடுத்து காவல்துறையினரின் அணிவகுப்பு மரியாதையை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஏற்றுக் கொள்கிறார். பின்னர் கோட்டை கொத்தளத்தில், தேசியக்கொடி யை ஏற்றி வைத்து வணக்கம் செலுத்துகிறார். இதையடுத்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு மக்களுக்கு சுதந்திர தின உரை நிகழ்த்துகிறார்.

சுதந்திரதினவிழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தேசியக்கொடியேற்றுவதை முன்னிட்டு இரவு, பகல் என 24 மணி நேரமும் துப்பாக்கி ஏந்திய போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். தமிழ்நாடு முழுவதும் சுதந்திர தின பாது காப்பு பணியில் சுமார் ஒரு லட்சம் போலீசார் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

சுதந்திர தின விழா நிகழ்ச்சியில் பங்கேற்க வரும் உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி, அமைச்சர்கள், எம்.பி.க்கள், எம்.எல்.ஏ.க்கள், ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ். மற்றும் வி.ஐ.பி.க்கள், சிறப்பு அழைப்பாளர்கள் அமர்வதற்கான மேடைகள் அமைக்கப்பட்டு உள்ளன.


